## டிசம்பர் – 16 – திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு

### நாங்கள் என்ன செய்ய வேண்டும்? லூக்.3:14

---

### முதல் வாசகம் : செப்போனியா 3 : 14 - 18

மகளே சீயோன்! மகிழ்ச்சியால் ஆர்ப்பரி இஸ்ரயேலே! ஆரவாரம் செய் மகளே எருசலேம்! உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி. ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார் உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார் இஸ்ரயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய். அந்நாளில் எருசலேமை நோக்கி இவ்வாறு கூறப்படும் "சீயோனே, அஞ்சவேண்டாம் உன் கைகள் சோர்வடைய வேண்டாம். உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார் அவர் மாவீரர் மீட்பு அளிப்பவர் உன்பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார் தம் அன்பினால் உனக்குப் புத்துயிர் அளிப்பார் உன்னைக் குறித்து மகிழ்ந்து ஆடிப்பாடுவார். அது திருவிழாக் காலம்போல் இருக்கும். உனது துன்பத்தை அகற்றிவிட்டேன் ஆகவே, இனி நீ இழிவடைய மாட்டாய்.

**பதில்பாடல் :** ஆர்ப்பரித்து அக்களியுங்கள். ஆண்டவர் சிறந்து விளங்குகின்றார்.

### இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 4 : 4 - 7

சகோதர, சகோதரிகளே! ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள் மீண்டும் கூறுகிறேன், மகிழுங்கள். கனிந்த உங்கள் உள்ளம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கட்டும். ஆண்டவர் அண்மையில் உள்ளார். எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங் களைத் தெரிவியுங்கள். அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும்.

### நற்செய்தி : லூக்கா 3 : 10 - 18

அக்காலத்தில் திருமுழுக்கு யோவான் போதித்துக்கொண்டிருந்த போது அப்போது, "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கூட்டத்தினர் அவரிடம் கேட்டனர். அதற்கு அவர் மறுமொழியாக, "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்" என்றார். வரி தண்டுவோரும் திருமுழுக்குப் பெறவந்து, "போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று அவரிடம் கேட்டனர். அவர், "உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்" என்றார். படைவீரரும் அவரை நோக்கி, "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டனர். அவர், "நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள் யார்மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள் உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்" என்றார். அக்காலத்தில் மக்கள் மீட்பரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை யோவான் மெசியாவாக இருப்பாரோ என்று எல்லாரும் தங்களுக்குள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். யோவான் அவர்கள் அனைவரையும் பார்த்து, "நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன் ஆனால் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார். அவர் சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார். கோதுமையைத் தம் களஞ்சியத்தில் சேர்ப்பார் பதரையோ அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்" என்றார். மேலும் பல அறிவுரைகள் கூறி மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தார்.

**தியானம்:** "உள்ள மகிழ்ச்சியே மனிதரை வாழ வைக்கிறது. அகமகிழ்வே மானிடரின் வாழ்நாளை வளரச் செய்கிறது" சீரா.30:22 மனமகிழ்ச்சியே ஒரு மனிதரை வாழ வைக்கின்றது. மன மகிழ்ச்சியை உலக மனிதர்கள் வெளியே தேடிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய அணிகலன்களில், ஆடைகளில், உணவு வகைகளில், நண்பர்களில், கேளிக்கை வினோத செயல்பாடுகளில் மனிதர்கள் தங்கள் இன்பத்தைத் தேடுகிறார்கள். இறுதியில் நிலையான இன்பத்தை அனுபவிக்க முடியாமல் தங்களுடைய தவறான செயல்பாடுகளுக்காய் குற்ற உணர்வோடும், வெறுமையிலும் தனிமையிலும் தங்களை அழித்துக் கொள்ளும் மனிதர்களாக மாறிப்போகிறார்கள். எனவேதான் இன்றைய இரண்டாம் வாசகத்தில் தூய பவுலடியார் நமக்குக் கற்றுத்தருகிறார் "ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள், மீண்டும் கூறுகின்றேன் மகிழுங்கள்" என்று. உண்மையோடும் நீதியோடும் வாழ்பவர்கள் மட்டுமே கடவுளில் மகிழ்ச்சியைக் கண்டடைய முடியும். கடவுளின் இரக்கத்தையும் அவருடைய மன்னிப்பையும் உணர்பவர்கள் கடவுளில் மகிழ்ச்சியை உணர்வார்கள். "உமது பேரன்பில் நான் களிகூர்வேன், அக்களிப்பேன்" (திபா.31:7). கடவுளை மட்டுமே சார்ந்து வாழ்கின்ற மனிதர்கள் கடவுளில் உய்த்துணரும் இன்பத்தை அனுபவிப்பார்கள் "அவரை நோக்கிப் பார்த்தோர் மகிழ்ச்சியால் மிளிர்ந்தனர் அவர்கள் முகம் அவமானத்திற்கு உள்ளாகவில்லை" (திபா.34:5). ஆண்டவரே எனக்குப் போதும் என்ற எண்ணத்தில் வாழ்பவர்களுக்கு கடவுளே அவர்களுடைய உள்ளத்து விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றி நிறைவான இன்பத்தை துய்க்க அருள்தருவார் "ஆண்டவரிலேயே மகிழ்ச்சிகொள் உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார்" (திபா.37:4). இவைகளுக்கு மாறாக சிற்றின்ப நாட்டங்களினால், உடல் இன்பங்களினால் வரும் இன்பத்தை அனுபவிக்க விரும்புகிறவர்களுக்கு இன்பம் என்பது கானல் நீராக மாறிப்போய்விடும். எனவேதான் தூய ஆவி அருளும் கொடையான மகிழ்வை அனுபவிக்க என்னனென்ன செய்ய வேண்டும் என்று தூய திருமுழுக்கு யோவான் அன்றைய மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதுபோல இன்றும் நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். ஆண்டவருக்கு விருப்பமானதை தேர்ந்து கொள்வதும் தீமையை, பாவத்தை அறவே விட்டொழிப்பதும்தான் உள்ளார்ந்த மகிழ்வுக்கு அடிப்படை. பாவத்தில் இருந்து கொண்டு பரமனில் இருந்து ஊற்றெடுக்கும் இன்பத்தின் சுவையை அனுபவிக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருப்பது முட்டாள்தனம். சுட்டெரிக்கும் தூய ஆவியானவரின் வழிகாட்டுதலால் உடலுக்கும் உடலின் இன்பங்களுக்கும் இறப்போம் ஆவியானவர் தரும் மகிழ்வு என்னும் கொடையை அனுபவிப்போம்.